கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சியமைக்கிறது தி.மு.க.!

தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பில் தகவல்!

சென்னை,ஏப்.30–

2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்கள் நடத்திய தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பில், தி.மு.க. மீண்டும் ஆட்சியமைக்கும் என நேற்று (29.4.2026) மாலை வெளியிட்ட அறிவிப்பில் உறுதிபடத் தெரிவித்துள்ளன.

அக்னி நியூஸ் சர்வீசஸ்	மின்னம்பலம்	Chanakya Strategy
திமுக+ : 169	திமுக+ : 155	திமுக+ : 145–160
அதிமுக+ : 64	அதிமுக+ : 72	அதிமுக+ : 50 – 65
NDTV :	**ஏபிபி நாடு**	**பீப்பிள்ஸ் இன்சைட்**
திமுக+ : 125–145	திமுக+ : 148–168	திமுக+ : 120–140
அதிமுக+ : 65 – 80	அதிமுக+ : 61 – 81	அதிமுக+ : 60 – 70
ரிபப்ளிக் – பி மார்க்	**பீப்பிள்ஸ் பல்ஸ்**	**சாவியா ரிசர்ச்**
திமுக+ : 125–145	திமுக+ : 125–145	திமுக+ : 118–130
அதிமுக+ : 65 – 85	அதிமுக+ : 65 – 80	அதிமுக+ : 59 – 75

இவ்வாறு கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன.

மே தினம் : நினைவுச் சின்னத்தில் கழகத் தலைவர்

முதல்வர் மு.க.ஸ்டாலின் மலரஞ்சலி செலுத்துகிறார்!

தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் அறிவிப்பு!

சென்னை, ஏப். 30-

உலக உழைப்பாளிகளின் திருநாளாம் மே தினத்தை யொட்டி 01.05.2026 அன்று காலை 7.30 மணியளவில் சென்னை சிந்தாதிரிப் பேட்டை மேதினப் பூங்காவில் அமைந்துள்ள மேதின நினைவுச் சின்னத்திற்கு கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், தி.மு.கழக நிர்வாகிகளும் மலரஞ்சலி செலுத்திட வருகை தர உள்ளார்கள்.

எனவே தொ.மு.ச. பேரவை இணைப்புச் சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் கருப்பு - சிவப்பு சீருடை அணிந்து பேரவை கொடியுடன் வருகை தந்திட வேண்டு மாய் தொ.மு.ச. பேரவை சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இடம் :கலைஞரகம்
நாள் : 29.04.2026

மு.சண்முகம்
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை

"பாவேந்தர்" பாரதிதாசன் 136வது பிறந்த நாள் விழா!

தமிழ்நாடு அரசின் சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது!

சென்னை, ஏப். 30-

தமிழ்நாடு அரசின் சார்பில், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 136வது பிறந்த நாளான நேற்று (29.4.2026), சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள பாவேந்தர் பாரதிதாசன் திருவுருவச் சிலைக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் அவர்கள் மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் புகழையும் பெருமையையும் போற்றும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் அவரது பிறந்த நாள் அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் இந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாள் சென்னை கடற்கரை காமராசர் சாலையில் அமைந்துள்ள பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 136வது பிறந்த நாள் நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர், கூடுதல் இயக்குநர்கள், அரசின் உயர் அலுவலர்கள், தமிழறிஞர்கள், பொதுமக்கள் முன்னிலையில் பாவேந்தர் பாரதிதாசன் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தினார்கள்..

அரசுப் பள்ளி மாணவர் சேர்க்கை ஒரு லட்சத்தைக் கடந்தது!

சென்னை, ஏப். 30-

தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் 2026 27ஆம் கல்வி யாண்டுக்கான மாணவர் சேர்க்கை நடை பெற்று வரும் நிலையில், இதுவரையிலான மாணவர் சேர்க்கை எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் முதலாம் வகுப்பில் 97 ஆயிரத்து 737 மாணவர்களும், இரண்டாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை 8 ஆயிரத்து 178 மாணவர்களும், மழலையர் வகுப்புகளில் 6 ஆயிரத்து 796 மாணவர்களுமாக மொத்தம் 1 லட்சத்து 12 ஆயிரத்து 711 மாணவர்கள் இதுவரை சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழக பள்ளிக் கல்வித் துறையின் கீழ் 37 ஆயிரத்து 554 அரசுப் பள்ளிகள் இயங்கி வருவதுடன், சுமார் 52 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு 4 லட்சத்து 30 ஆயிரம் மாணவர்கள் புதிதாக சேர்க்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு 5 லட்சம் மாணவர்களை சேர்ப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணிகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

மேற்குவங்கத்தில் 2வது மற்றும் இறுதிக்கட்ட தேர்தல் வாக்குப்பதிவு!

மக்கள் ஆர்வமுடன் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர்!

கொல்கத்தா, ஏப். 30-

மேற்கு வங்க மாநிலத்தில் மொத்தமுள்ள 294 தொகுதிகளுக்கு இரண்டு கட்டங்களாக சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. முதற்கட்டமாக 152 தொகுதிகளில் கடந்த 23ம் தேதி வாக்குப்பதிவு நடந்தது.

முதற்கட்டத் தேர்தலில் மொத்தம் 3 கோடியே 60 லட்சம் பேர் வாக்குரிமை பெற்றிருந்த நிலையில், 93 புள்ளி 19 சதவீத வாக்குகள் பதிவாகின.

இந்நிலையில், இரண்டாம் கட்டமாக மீதமுள்ள 142 தொகுதிகளில் விறுவிறுப்பான வாக்குப்பதிவு நடைபெற்றது.

முதலமைச்சர் மம்தா பானர்ஜி போட்டியிடும் பவானிபூரிலும் வாக்குப்பதிவு நடைபெற்றது. கொல்கத்தா வடக்கு, கொல்கத்தா தெற்கு, ஹவுரா, நாடியா, வடக்கு 24 பர்கானாஸ், தெற்கு 24 பர்கானாஸ், ஹூக்ளி மற்றும் புர்தா பர்தாமன் ஆகிய 8 மாவட்டங்களில் 2ம் கட்டத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற்றது. இதில் மொத்தம் 3 கோடியே 21 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர்.

இதனிடையே, பாதுகாப்பு பணிகளுக்காக மேற்கு வங்கத்தில் 2 லட்சத்து 34 ஆயிரம் மத்திய பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். அதிகபட்சமாக கொல்கத்தாவில் 27 ஆயிரத்து 400 பேர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வாழும் பாரம்பரியம்: 2026 கண்ணபுரம் கால்நடை கண்காட்சி!

கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை!

கோவை, ஏப். 30-

2026 கண்ணபுரம் கால்நடை கண்காட்சியை ஆவணப்படுத்துவதில் சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளையின் (SKCRF) மரபு குறித்து, கழக சுற்றுச்சூழல் அணிச் செயலாளரும், அயலகத் தமிழர் நல வாரியத் தலைவருமான கார்த்திகேய சிவசேனாபதி பெருமிதத்துடன் தெரிவித்துள்ளார்.

திருப்பூர் மாவட்டத்தில் நடைபெறும் கண்ணபுரம் கால்நடைக் கண்காட்சி, இந்தியாவின் மிக முக்கியமான கால்நடைப் பாரம்பரியங்களில் ஒன்றாகும். 1,000 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இந்த வருடாந்திரச் சந்தை, தமிழ் நிலத்தின் பண்டைய ஆயர் மரபுகளின் முக்கியச் சங்கிலியாகத் திகழ்கிறது. சர்வதேச மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ப்பர்கள் ஆண்டை (IYRP) 2026இல் உலகம் அனுசரிக்கும் வேளையில், இந்தப் பாரம்பரியத்தின் ஆழமான வேர்களை நாங்கள் அங்கீகரிக்கிறோம். "பதிற்றுப்பத்து" மற்றும் "தொல்காப்பியம்" போன்ற பண்டைய சங்க இலக்கியங்கள், கொங்கு நிலக் கால்நடைகளை கி.மு. 300க்கு முன்பே ஆவணப்படுத்தியுள்ளன. இது மக்களுக்கும், உன்னதமான காங்கயம் இனத்திற்கும் இடையே உள்ள 3,000 ஆண்டுகள் பழமையான பிணைப்பை விளக்குகிறது.

SKCRFஇன் பணிகள் (2009 முதல் தற்போது வரை): இந்தக் கண்காட்சி மிகத் தொன்மையானது என்றாலும், அதன் கலாச்சார மற்றும் மரபியல் முக்கியத்துவத்தை ஆவணப்படுத்தவும் பாதுகாக்கவும் நவீன முயற்சிகளை சேனாபதி காங்கயம் கால்நடை ஆராய்ச்சி அறக்கட்டளை (SKCRF) முன்னெடுத்துள்ளது.

2009 முதல் SKCRF அயராது ஆற்றி வரும் பணிகள்:

- உயிரியல் கலாச்சார ஆவணமாக்கம்: கால்நடை பராமரிப்பாளர்களின் மரபு சார் வாழ்வியல் முறைகளை ஆவணப்படுத்துதல்.
- இன்சிட்டு (Insitu) பாதுகாப்பு: காங்கயம் இனத்தை அதன் இயல்புச் சூழலிலேயே பாதுகாப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- அறிவியல் மற்றும் பாரம்பரிய இணைப்பு: இந்தியப் புல்வெளிகளின் 35,000 ஆண்டுகள் பழமையான பாரம்பரியத்தைப் பாதுகாக்க சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து, பாரம்பரிய அறிவிற்கும் நவீன அறிவியலுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைத்தல்.

தொடரும் மரபு:

இன்று சத்தியமங்கலத்தில் உள்ள காங்கயம் கால்நடை ஆராய்ச்சி நிலையம் (KCRS), பாரம்பரியமும் தொழில்நுட்பமும் சங்கமிக்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. இங்கு வளர்க்கப்படும் ஒவ்வொரு கன்றும், கொங்கு நாட்டு மக்களின் செல்வம் மற்றும் கலாச்சாரப் பெருமையின் அடையாளமாக விளங்குகிறது.

2026 கண்ணபுரம் கால்நடை கண்காட்சி ஏப்ரல் 30, 2026 வரை நடைபெறுகிறது. விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இதில் பங்கேற்று, காங்கயம் இனத்தைப் பாதுகாப்பதோடு, தமிழகத்தின் ஆயர் பாரம்பரியத்தைக் கொண்டாடவும் இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

இவ்வாறு கழக சுற்றுச் சூழல் அணிச் செயலாளரும், அயலகத் தமிழர் நல வாரியத் தலைவருமான கார்த்திகேய சிவசேனாபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

டெல்லி மாநிலத் தேர்தலின்போது மகளிர்க்கு மாதம்

ரூ.2500 வழங்கப்படும் என்ற பா.ஜ.க. தேர்தல் வாக்குறுதி என்ன ஆனது?

முன்னாள் முதலமைச்சர் அதிஷி கேள்வி!

புதுடெல்லி, ஏப். 30-

டெல்லியில் பெண்களுக்கான மாத உதவித்தொகை 2,500 ரூபாய் வழங்கப்படும் என்ற பா.ஜ.க.வின் தேர்தல் வாக்குறுதி என்ன ஆனது என, முன்னாள் முதலமைச்சர் அதிஷி கேள்வி எழுப்பியுள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்தாண்டு ஜனவரியில் நடைபெற்ற டெல்லி சட்டப்பேரவை தேர்தலில், மகளிருக்கு மாதந்தோறும் 2 ஆயிரத்து 500 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் என பா.ஜ.க. அறிவித்தது. இதற்காகப் பெண்கள் தங்கள் தொலைபேசி எண்களை வங்கிக் கணக்குகளுடன் இணைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும், அந்தத் தொகை வரவு வைக்கப்பட்டதை உறுதி செய்யும் குறுஞ்செய்தி அவர்களுக்கு அனுப்பப்படும் என்று உறுதியளிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால், ஆட்சிக்கு வந்து 16 மாதங்கள் ஆகியும் டெல்லியில் உள்ள பெண்கள் இதுவரை அந்தத்தொகையைப் பெறவில்லை என்று அதிஷி குற்றம் சாட்டியுள்ளார். மேலும், டெல்லி போக்குவரத்து பேருந்துகளில் எளிதாகப் பயணம் செய்தவர்கள், பிங்க் கார்டுகளுக்காக வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இலவச மருந்துகள், சிகிச்சை மற்றும் மருத்துவப் பரிசோதனைகளைப் பெறுவது கடினமாகிவிட்டதாகவும் டெல்லி முன்னாள் முதலமைச்சர் அதிஷி தெரிவித்தார்.

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு 11,823 சிறப்பு பேருந்துகள்!

போக்குவரத்துத் துறை மேலாண் இயக்குநர் தகவல்!

சென்னை, ஏப். 30-

சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு இன்று முதல் 2ம் தேதி வரை 11823 பேருந்துகள் தினசரி இயக்கக் கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும் என்று அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: இன்று (30.04.2026) இரவு 9.50 மணி முதல் 1ம் தேதி இரவு 11.07 மணி வரை (வெள்ளிகிழமை) சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு திருவண்ணாமலைக்கு 2ம் தேதி வரை சென்னையிலிருந்து திருவண்ணாமலைக்கும் மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கும் கூடுதலான பயணிகள் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து இன்று 548 பேருந்துகளும், 1ம் தேதி 565 பேருந்துகளும் மற்றும் 2ம் தேதி 35 பேருந்துகளும் சென்னை மாதவரத்திலிருந்து இன்று 186 பேருந்துகளும் 1ம் தேதி 174 பேருந்துகளும் மற்றும் சென்னை அடையாறிலிருந்து இன்று 55 பேருந்துகளும் 1ம் தேதி 50 பேருந்துகளும் தினசரி இயக்கக் கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும் மற்றும் சென்னை கோயம்பேட்டிலிருந்தும் இயக்கப்படும்.

ஆக, சென்னை மற்றும் பல்வேறு இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு இன்று முதல் 2ம் தேதி வரை 11823 பேருந்துகள் தினசரி இயக்கக் கூடிய பேருந்துகளுடன் கூடுதலாக இயக்கப்படும். அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக இருக்கை மற்றும் படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனம் கொண்ட 40 பேருந்துகள் சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு 1ம் தேதி இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, நாகர்கோவில், தென்காசி, தூத்துக்குடி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், முன்பதிவு செய்து பயணிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பயணிகள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு www.tnstc.in மற்றும் மொபைல் ஆப் மூலம் முன்பதிவு செய்து பயணிக்கலாம்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, பயணிகள் மேற்கூறிய வசதியை பயன்படுத்தி தங்களது பயணத்தை மேற்கொள்ளலாம். இவ்வாறு போக்குவரத்துத் துறை மேலாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

234 தொகுதிகளுக்கான

தபால் வாக்குகள் பிரித்து மாவட்ட வாரியாக ஒப்படைப்பு!

திருச்சி, ஏப். 30-

தமிழகத்தின் 234 தொகுதிகளுக்கான தபால் வாக்குகளைபிரித்துமாவட்டவாரியாக அந்தந்தத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் ஒப்படைக்கும் இரண்டாம் கட்ட பணி திருச்சி சிறப்பு மையத்தில் செவ்வாய்க்கி ழமை நடைபெற்றது.

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, தமிழகம் முழுவதும்தபால்வாக்குகள் வழங்கப்பட்டு, தேர்தல் பணியாற்றும்அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பதிவு செய்யப்பட்டதபால் வாக்குகளை தேர்தலை உரிய சட்டப் பேரவை தொகுதிக்கு அனுப்புவதில் உள்ளசிரமங்களைகருத்தில் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தேர்தல் அலுவலர்களால் பெறப்பட்டதபால்வாக்குகளைப் பிரித்து வழங்க பொதுவான சிறப்பு மையமாக திருச்சி மாவட்டம் தேர்வு செய்யப்பட்டு திருச்சி மத்திய பேருந்துநிலையம் அருகேஉள்ளகலையரங்கம் மஹாலில்இதற்கானஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இங்கிருந்து ஏப். 13ஆம் தேதிஅந்தந்ததொகுதிகளுக்கான தபால் வாக்குச் சீட்டுகள், உறுதிமொழிப் படிவம் அந்தந்தமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது

தொடர்ந்து இங்கு, ஏப். 20ஆம்தேதிமுதல்கட்டமாக தபால் வாக்குகளை பிரித்து வழங்கும் பணி நடை பெற்றது.

2-ஆம் கட்டம்:

இந்நிலையில், இரண்டாவது கட்டமாக 38 மாவட்டங்களுக்கான தபால் வாக்குகளை பிரித்து வழங்கும் பணி செவ்வாய்க் கிழமை (ஏப்.28) நடைபெற்றது.

இந்தப் பணியை கூடுதல் தலைமைதேர்தல்அலுவலர் அ.சிவஞானம் தொடங்கி வைத்தார்.திருச்சிமாவட்ட தேர்தல்அலுவலரும்,ஆட்சியருமான வே.சரவணன் முன்னிலையில் பணிகள் நடைபெற்றன.

மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த தொடர்புடைய மாவட்ட தேர்தல் அலுவலர்களால் நியமனம் செய்யப்பட்ட பொறுப்பு அலுவலர்கள் கலந்து கொண்டனர். பிறகு தமிழகம் முழுவதும் உள்ள 38 மாவட்டங்களுக்கான தபால்வாக்குகள்,சம்பந்தப்பட்டமாவட்டங்களில்நியமனம் செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு அலுவலர்களால் பிரித்து வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தபால் வாக்குகளை கவனிக்கும் தொடர்பு அலுவலர்கள்,உதவியாளர்கள்மற்றும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் கலந்துகொண்டனர்.

ஒப்படைப்பு:

38 மாவட்டங்களுக்கும் பதிவான தபால் வாக்குகள் பிரிக்கப்பட்டு, அந்தந்த மாவட்டத்தின் தபால் வாக்குகள் ஒருங்கிணைப்பு அலுவலர்களிடம்ஒப்படைக்கப்பட்டன.

திருச்சியிலிருந்து தபால் வாக்குகளை பெற்றுக் கொண்டு அவரவர் மாவட்டங்களுக்குச் சென்று தேர்தல் அலுவலர்களிடம் ஒப்படைத்து அந்தந்த தொகுதியில் சேர்த்திடும் வகையில்நடவடிக்கைஎடுக்கப்பட்டு வருகிறது.

கோடைகாலத்திலும் வற்றாத ஏரி!

மன்னார்குடி , ஏப். 30 -

கோடைகாலத்திலும் ஏரியில் தண்ணீர் உள்ளதால், வடுவூர் பறவைகள் சரணாலயத்தில் 110 பறவை இனங்கள் வந்து குவிந்துள்ளன.

இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி அடுத்த வடுவூரில் சுமார் 316 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமான ஏரி அமைந்துள்ளது.

இங்கு பாதுகாக்கப்பட்ட பறவைகள் சரணாலயமாக திகழும் இந்த சரணாலயம் ராம்சார் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. இந்த ஏரியைச் சுற்றி வளமான ஈர நிலங்கள் அதிக அளவில் உள்ளதால் ஆண்டு தோறும் நவம்பர், டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான பறவைகள் வந்து செல்கிறது.